[2020 மார்ச் 17

(அ) கொரோனா வைரஸ் நோய் பரவுதலைத் தடுப்பதற்கு மருத்துவ வசதிகளை விரிவுபடுத்துதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Corona virus நோய் குறித்து என்னுடைய தலைமையில் மூத்த அமைச்சர்கள், அரசுத் துறைச் செயலாளர்கள், இரயில்வே துறை, விமானப் போக்குவரத்துத் துறை உள்ளிட்ட பல்வேறு துறை வல்லுநர்களைக் கொண்டு, அவ்வப்போது கூட்டம் நடத்தப்பட்டு அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து, தகுந்த ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. மேலும், corona virus நோய் குறித்து மத்திய அரசால் அளிக்கப்படும் அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் பரிசீலித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் தொடர்ந்து போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. Corona virus நோய் தொடர்பான நடவடிக்கைகளை தீவிரமாகக் கண்காணிக்க அரசு தலைமைச் செயலாளர் தலைமையில் அலுவல் மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்களைக் கொண்ட சிறப்புப் பணிக் குழு (Task Force) ஒன்றை அமைக்க உத்தரவிட்டுள்ளேன் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தக் குழுவில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் அரசுச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், தகவல் தொழில்நுட்பத் துறையின் அரசு முதன்மைச் செயலாளர், தொழில் துறையின் அரசு முதன்மைச் செயலாளர், போக்குவரத்துத் துறையின் அரசு முதன்மைச் செயலாளர், வருவாய் நிருவாக ஆணையர், காவல் துறைத் தலைவர், மருத்துவக் கல்வி இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத் துறையின் இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறையின் இயக்குநர், தென்னக இரயில்வே பொது மேலாளர், சென்னை விமான நிலைய இயக்குநர், சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் தலைவர், பொது சுகாதாரத்தின் சார்பாக வல்லுநர் ஒருவரும், தனியார் துறை சார்பாக வல்லுநர் ஒருவரும் கொண்ட குழுவை அமைக்க உத்தரவிட்டுள்ளேன்.

இச்சிறப்புப் பணிக் குழு, அவ்வப்போது சந்தித்து அரசு வழங்கும் உத்தரவுகளை சரியான முறையில் அமல்படுத்துவதை தீவிரமாகக் கண்காணித்து, கொரோனா வைரஸ் நோய்த் தொற்றினை தமிழ்நாட்டில் முழுமையாகத் தடுக்க அனைத்து நடவடிக்கைகளை எடுக்கவும், உரிய அறிவுரைகளை வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

(இ) கவன ஈர்ப்புத் தீர்மானங்களை அவையில் எடுத்துக்கொள்வது குறித்து—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்) அதுதான். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், கவன ஈர்ப்புத் தீர்மானம் குறித்து, என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து பேசியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை, சட்டமன்றம் இப்போது கூடி 4, 5 நாட்கள்தான் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதற்குப் பின்னர், இப்போதுதான் உறுப்பினர்கள் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கொடுக்கின்ற கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் உடனடியாக, துறையினுடைய பதிலைப் பெறுவதற்காக மாண்புமிகு அமைச்சர்களுக்கும், துறைச் செயலாளர்களுக்கும் முறையாக அனுப்பி வைக்கப்படுகின்றன. பதில் வர, வர ஒவ்வொன்றாக அவற்றை எடுத்துக்கொள்வதற்கு எனக்கு எந்தத் தயக்கமும் கிடையாது. அதேநேரத்திலே, பிரச்சினைகளினுடைய முக்கியத்துவத்தைக் கருதி, 'Zero Hour'—லேயே நான் உங்களுக்கு சில நேரங்களில் அனுமதி கொடுத்து, மாண்புமிகு அமைச்சர்களை பதில் சொல்ல வைத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர்களிடத்திலிருந்து, செயலாளர்களிடத்திலிருந்து கவன ஈர்ப்பிற்கான பதிலை விரைவாகப் பெற்று, பதில் வர வர கவன ஈர்ப்புத் தீர்மானங்களை ஒவ்வொன்றாக நான் எடுத்துக்கொள்கிறேன் என்பதை உங்களுக்கு என்னுடைய பதிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நாங்கள் உணர்வோம். நீங்கள் Department—க்கு அதை அனுப்பினாலும், அவர்கள் உடனடியாக அதற்கு பதில் அனுப்புவதில்லை. So, you are entitled with a right, to send a summon